கட்டணம் வாங்காத கல்லூரி

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை : புரட்டாசி 6உ புதன் (22—9—54) வெளியூர் : புரட்டாசி 7உ வியாழன் (23—9—54)	மலர் : 2 இதழ் : 86

தி. மு. கழகம்

சமுகச் சீரழிவுகளை

துடைப்பதுதான் நமது இலட்சியம்

சுயமரியாதை இயக்கம்

பெற்றுள்ள வெற்றி மகத்தானதே!

ஆனால் ஆற்ற வேண்டிய பணியோ மிகப் பெரிது

ஆரிய மாயையின் உரு ஆச்சாரியார்!

இராமாயணமெனும் பிணம் கொத்தும் கழுகாகிருர்!

பிணவாடைபரப்பும்பெருநோய்தடுக்க ஊசி போடுவதே தி. மு. கழக வேலை

சென்னையில் கருணாநிதி முழக்கம்

★

"வானத்திலே வட்டமிடும் கழுகு, வீதியிலே விளையாடும் குழந்தையின் கைகளிலிருக்கும் பண்டங்களைப் பறித்துச் செல்வதுமின்றி, குழந்தையைச் சுற்றி நிற்கும் பெரியவர்கள் முகத்தையும் பிராண்டி விட்டுச் செல்வதைப்போல், ஆச்சாரியார் எனும் கழுகு ஆட்சிபீடத்திலிருந்து கொண்டு, குழந்தைகள் கையிலிருந்த கல்வி எனும் பண்டங்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தது மட்டுமின்றி, பெற்றோர் முகங்களிலும் பிராண்டிக் கொண்டிருந்தது; ஊரார் எல்லாம் ஒன்று சேர்ந்து, பண்டத்தைப் பறித்து, முகத்தைப் பிராண்டிச் செல்லும் அந்தக் கழுகை விரட்டியடிப்பதுபோல், நாமெல்லாம் சேர்ந்து ஆச்சாரியார் எனும் கழுகை ஆட்சி பீடத்திலிருந்து விரட்டினோம்; ஆனாலும், ஓய்வு பெற்றிருப்பதாகச் சொல்லும் அந்த ஆச்சாரியார் எனும் கழுகு இருக்குமிடமிருந்து நாற்றம் அடிக்கிறது; இராமாயணம் எனும் பிணத்தைக் கொத்தித் தின்று கொண்டிருப்பதால் பிண நாற்றம் நாற்பக்கமும் வீசுகிறது; பொறுக்க முடியவில்லை.

"இராமாயணம், இவ்வளவு அவசர அவசரமாகவும், அவசியமாகவும் நாட்டிலே ஆச்சாரியார்களால் நடமாட விடப்படுவானேன்? ஆச்சாரியார், அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிருர் என்றால், அவர், தனது அரசியல் அனுபவங்களை நாட்டவர்க்குச் சொல்லலாமே! வேதாரணியம் உப்பளத்திலே சத்தியாக்கிரகம் செய்தபோது வெள்ளையர் செய்த அடக்குமுறைக் கொடுமைகளை, ஆதிக்கக்காரர்களால் புளிய விளார் கொண்டு, தனக்குத் தரப்பட்ட கொடிய தண்டனைகளை, அவற்றை, தாம், நாட்டின் சுதந்திரத்திற்காக உவகையோடு ஏற்றுக்கொண்ட தனது உள்ள உரத்தை, நாட்டவர்க்கு எடுத்துச் சொல்லலாமே! அப்படி காங்கிரஸ் செய்த தியாகத்தை, நடத்திய சுதந்திரப் போராட்டத்தை அவர் சொன்னால் நாம் அவரைத் தற்பெருமை பேசுகிருர் என்று சொல்லமாட்டோம்; ஆனால், அதை விடுத்து, 'இராமாயணம்' எனும் பிணத்தைக் கொத்தித் தின்னும் கழுகாய் ஆச்சாரியார் மாறுவானேன்?

"'கல்கி' பத்திரிகை காணாது; மாம்பலம் மேடைகள் போதாது; மயிலாப்பூர் அக்கிரகாரங்கள் காணாது என்று அகில இந்திய ரேடியோவிலும் சென்று 'இராமாயணம்' பற்றி பேசுகிருர் ஆச்சாரியார் என்றால், என்ன பொருள் அதற்கு? 'இராமாயணம்,' நாட்டவர் மத்தியில் நடமாடக் கூடாத ஒன்று, என்று எண்ணி, நாம் கடந்த சில காலமுதல் பணி புரிந்துவருவது, அதன் பலனும் நாட்டிலே ராமாயணத்திற்கிருந்த செல்வாக்கு மங்கிப்போவது ஆச்சாரியாருக்கும் பொறுக்கவில்லை என்பதுதானே இதற்குப் பொருள்?

"ஆச்சாரியாருக்கு அனுமதி கிடைக்கிறது—அகில இந்திய ரேடியோவில், 'இராமாயணம்' பற்றிப் பேச; ஆனால், வால்மீகி எழுதிய 'இராமாயண'த்தை, நடிகவேள் இராதா நடிக்க முற்பட்டால் தடை விதிக்கப்படுகிறது; இராதாவின் குரல் ஒடுக்கப்படுகிறது.

"ஆச்சாரியார் போய் காமராசர் வந்திருக்கிருர் என்றால், வெறும் ஆள் மாற்றம்தான் நடைபெற்றிருக்கிறது என்பதைத்தானே இந்தத் தடை சொல்லுகிறது?

(4-ம் பக்கம் பார்க்க)

★

நிகழ்ச்சிகள்

சென்னை, செப்; 21—
சென்னை 9-வது வட்ட சவுந்திரபாண்டியன் நிலைவுப் படிப்பகத்தின் முதலாண்டு விழா சென்னை மெமோரியல் மண்டபத்தில் மாலை 6-30 மணிக்குத் துவங்கியது.

துவக்கத்தில் தோழர்கள் நித்தியானந்தம், சண்முகம் ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

விழா கூட்டத்திற்கு தோழர் பி. இராமசாமி தலைமை தாங்கினார்.

படிப்பகச் செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தார்.

அடுத்துத் தோழர் முனைவர் ஆர். என். பாண்டியன் சித்தரோம் வேலாயுதம், நடிகமணி டி. வி நாராயணசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சவுந்திரபாண்டியனாரின் அருமைப் பணி குறித்தும், திறம் மிகுந்த சேவை குறித்தும் விரிவுரை நிகழ்த்தினார்.

அடுத்துத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

விழாவிற்கு நன்கொடையாக அணா 4 செலுத்தி ஏராளமான தோழர்களும் தாய்மார்களும் வந்து சிறப்பித்தனர். (ந-நி.)

கோசல்ராம் தேர்தல்

அப்பீல் தள்ளுபடி

புதுடில்லி, செப். 21—
சென்னை சட்டசபை உறுப்பினராக தோழர் கே. டி. கோசல்ராம் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என தேர்தல் கமிஷன் தீர்ப்பு கூறியதை ஒட்டி இந்திய உயர்நீதிமன்றத்திற்கு கோசல்ராம் தாக்கல் செய்திருந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

சீன அரசியல் சட்டம்

பாராளுமன்றத்தில் ஒப்புதல்

ஹாங்காங், செப். 21—
செஞ்சீனாவில் முதல் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மக்கள் காங்கிரஸ், பெருத்த ஆரவாரங்களுக்கிடையே ஒருமனதாக புதிய சீனாவின் அரசியல் திட்டத்தை அங்கீகரித்தது

இதில் 1197 மக்கள் சபை உறுப்பினர்கள் இரகசியமாக வாக்களித்ததாகவும், எல்லா உறுப்பினர்களும் புரிந்துகொள்ளும்படியாக மொழி பெயர்ப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

மயக்கம் நீக்குவோம்;— மக்கட் பணி ஆற்றுவோம்

நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை

"வைதீகம் எவ்வளவுதான் பொருள் பலம் படைத்திருந்தாலும், இன்று நாம்—பொருள் பலமற்ற நாம்—பெரு மலையையும் சிற்றுளி தகர்ப்பது போல் தகர்த்துக்கொண்டுதான் வருகிறோம்."

"இந்நிலையில், நாமா இத்தகு வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம் என்று எண்ணினால் ஒரு கணம் மயக்கம் ஏற்படத்தான் செய்கிறது. என்றாலும், நாம் செல்ல வேண்டிய இடமோ இன்னும் தொலைவில் உள்ளது; மக்கள் துயர் துடைக்கும் இலட்சியம் வெற்றி பெற வேண்டுமெனில், இதில் மயங்கிவிடக்கூடாது நாம். 'மயக்கம் நீக்குவோம்; மக்கட் பணி ஆற்றுவோம்,' என்ற உறுதி கொள்ளுங்கள் தோழர்களே!"

"இந்த நோக்கத்திற்காகவே, கலைகள் பயன்பட வேண்டும் என்று விரும்புபவன் நான்; நாடகமும், நாட்டியமும், இசையும், காட்சியும், எதுவானாலும், நாட்டு மக்கள் நல்லறிவு பெறுவதற்கே துணையாக வேண்டும்; இந்தக் கலைகளேதான் இதுகாறும் வைதீகத்திற்கு அரணாக, அதைப் பரப்பும் கருவியாக இருந்து வந்துள்ளன."

"இந்த உண்மையை, மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை நோக்கினாலே நன்றாகப் புரிந்துகொள்ளலாம்; திருமாலின் பத்து அவதாரங்களிலே, எது எது இன்று செல்வாக்கும் பெற்றுள்ளன? வராகவதாரமும், கூர்மாவதாரமும் எங்கே போற்றப்படுகின்றன? மச்சாவதாரமும், நரசிம்மாவதாரமும் எந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளன? ஆனால், இராமனும், கிருஷ்ணனும் மக்கள் மனத்தில் இந்த அளவு இடம் பெறக் காரணம் என்ன? இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமுமே மக்கள் மனத்தில் பதியச் செய்யக்கூடிய முறையில் நாடகத்திற்கு ஏற்ற பாத்திரங்களாக அமைந்தன; நாடகத்திற்கும், நடனத்திற்கும், கதைக்கும், காலட்சேபத்திற்கும் அதிகமாகப் பொருந்திய காரணத்தால்தான் இராம-கிருஷ்ண அவதாரங்கள், மற்ற அவதாரங்களைவிட அதிகம் பெரும் புகழும் செல்வாக்கும் பெற்றுள்ளன; மக்கள் உட்கார்ந்தால், 'இராமா'; எழுந்தால், 'கிருஷ்ணா'—என்னும் அளவுக்கு அவை இடம் பெறக் கலைகளே கருவியாயின."

"எனவே, வைதீக விஷத்தைப் போக்க விரும்பும் நாமும் அதே கலையையே கருவியாகக் கொண்டு செயலாற்ற வேண்டுமென விரும்புகிறேன். முள்ளை முள்ளால் தான் களைய வேண்டும்; விஷத்தை மாற்று விஷத்தால் தான் போக்க வேண்டும்."

"எனவேதான், நாட்டிலே ஒருசிலர், என்னை ஒரு நாடகமாடி, கூத்தாடி என்று குறிப்பிட்டாலும் நான் கவலைப்படவில்லை; மாறாக, எனக்கு இன்னும் ஓய்வு கிடைக்குமானால், உலகிலே தோன்றிய உத்தமர்கள் பலரைப் பற்றி, அவர்களது தொண்டையும் தியாகத்தையும், கொள்கையையும் கோட்பாட்டையும் விளக்கக்கூடிய காட்சிகளை, நாடகங்களாக வரைந்து நடித்துக் காட்டவே ஆசைப்படுகிறேன். அதற்கு நமது கலைத்துறை நண்பர்களான, எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி போன்றவர்கள், ஆர்வத்தோடு முன்வந்து பணியாற்றுவதை நான் வரவேற்கிறேன். கலைத்துறை எதுவானாலும், நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு, மறுமலர்ச்சிக்கும் பயன்பட வேண்டும் என்பது எனது ஆசை."

"நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களுங்கூட, நமது சமூகப் பணியை, சீர்திருத்த நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்; இப்பொழுதே பலர் புரிந்து கொண்டு வருகின்றனர்; மேலும் பலர்—அதிலும் குறிப்பாகக் காங்கிரஸ் இயக்கத்திலுள்ள இளைஞர்கள் நமது கொள்கையைத் தெரிந்து ஒத்துழைக்க விரும்புகின்றனர்."

"வளரும் நமது இயக்கத்தையும், வாழும் இலட்சியத்தையும், கட்டிக் காத்து வளர்க்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், திருநெல்வேலி அடுத்த பாளையங்கோட்டை சமாதானபுரத்தில் நடைபெற்ற நெல்லை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார். (4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 22—9—54 புதன்

பர்ணசாலை அதிபர்கள்!

'மகான் அவர்; கடவுளின் மறு உருவம்,' என்பார்கள்! இமயமலையில், இருபது வருடம் தவம்புரிந்தவர்; கைலாயம் அவருக்கு கைக்கு எட்டிய தூரம்,' என்பார்கள்! 'உணவு அருந்துவதே கிடையாது; பாலும், பழமும் தான் அவருக்கு ஆகாரம்; என்றாலும், அவர் மேனியிலே 'தேஜஸ்' எப்படியிருக்கிறது பார்த்தாயா? அத்தனையும் அவன் தந்த அருள்,' என்று புகழ்வார்கள்!

'துறவி என்றால் அவர் அல்லவோ துறவி? ஏராளமான சொத்து அவருக்கு இருந்தது; அத்தனையையும் வேண்டாமென்று கிளம்பியவர்; அவர் கையால் ஒருபிடி மண்ணை அள்ளிக் கொடுத்தார் என்றால், அது தீராத நோய் அனைத்தையும் குணப்படுத்தும்,' என்று பெருமையாகப் பேசுவார்கள்!

வேதாந்தி வைராகி, துறவி முனிபுங்கவர், தவசிரேஷ்டர், மகரிஷி என்னென்ன போன்ற சொற்களால் அழைக்கப்பட்டு பாராட்டப்படுவோர் பலர், நாட்டு மக்களுக்கு இழைக்கும் தீங்கு என்னவென்பதையும், அவர்கள் சமுதாயத்திலே ஏற்படுத்தியிருக்கிற கொடுமைகள் எவ்வளவு என்பதையும், பகுத்தறிவு இயக்கத்தினர் அடிக்கடி எடுத்துக்காட்டி வருகின்றனர்.

'பரமனைக் காட்டுகிறேன்; அவன் பாதாரவிந்தங்களை நோக்கி அழைத்துச் செல்கிறேன்; தீராத நோய்க்கு மருந்து தருகிறேன்; பில்லி சூனியத்தைப் போக்குகிறேன்' என்று கூறி, இந்தக் கபட வேடதாரிகள் பலர், ஊர் மக்களை ஏமாற்றிப் பிழைப்பதும், எதுமறியா இளம் பெண்களின் வாழ்வைச் சூறையாடுவதும் நாட்டு மக்கள் அறிந்த நிகழ்ச்சிகளாகும்.

ஒரு மாதத்திற்கு முன்பு கட்டாக் அருகேயுள்ள கலிய போலா என்னும் மடத்தில் போலீசாரால் தேடப்பட்டு வந்த சிலரைப் பிடிக்கச் சென்ற கட்டாக் போலீசாரை அங்கிருந்த சாதுக்கள் வாள் ஏந்தித் தாக்கினரென்றும், பின்னர் போலீசார் அந்த மடத்திலிருந்து ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினர் என்றும் செய்தித் தாள்கள் கூறின.

இப்போது கோரக்பூர் அருகே உள்ள சாது ஒருவரின் பர்ணசாலையில் இரண்டு ரைபிள்கள் காணப்பட்டன என்றும், அந்தத் துப்பாக்கிகள் இரண்டும் சர்க்கார் அதிகாரிகளினுடையது என்றும் உ. பி. சட்டசபையில் கூறியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு சம்பவங்களும், நாட்டிலே நடைபெறுகிற ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

'சர்க்கார் அதிகாரிகள் சாதுக்களுக்கு உதவுகிறார்கள்,' என்று வடநாட்டிலே பேசுகிறார்கள்; ஆனால், இங்கே, சாதுக்களுக்குப் பலரிடமிருந்து ஆதரவு கிடைக்கின்றன.

திராவிடத்தில் பகுத்தறிவு இயக்கத்தினரின் பிரசாரத்திற்குப் பின்னர், இது போன்ற பர்ணசாலை அதிபர்களின் ஆதிக்கம் குறைந்து வருகிறது; என்றாலும், சில இடங்களில் மக்களை ஏமாற்றுவதற்காக மயக்கு மொழி பேசி, செல்வத்தைக் கொள்ளையிடுவோர் காணப்படுகிறார்கள்.

விழிப்படைந்த சமுதாயத்தில் இது போன்ற சாதுக்கள் வாழ முடியாது; ஆனால், 'இந்து மதத்தின் பாதுகாவலர்கள் இந்த சாதுக்கள்,' என்று மயக்கு மொழி பேசுவோர், மக்களை நடைபிணமாகச் செய்துவிட்டார்கள்; 'பரமனுக்கும், இந்தப் பக்தர்களுக்கும் அதிக தொடர்பு உள்ளது; இந்த வேதாந்திகளின் கரம் பட்டால் நோய் தீரும்; இவர்கள் அருள் பெற்றால் பரலோகம் கிட்டும்,' என்று மக்களை நம்பவைத்து மடமையை வளர்த்திருக்கிறார்கள்.

சாதுக்கள் என்போர், சன்மார்க்கம் என்ற பெயரால் பித்தர்கள் போல் நடித்து, உழைக்காது வாழும் சோம்பேறிக் கூட்டத்தினர் என்பதை நாட்டு மக்கள் உணர வேண்டும்.

'மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கிறேன்,' என்று ஊர் அறியச் சொல்லும் பலர் 'இமயமலையிலே இருபது ஆண்டுகள் 'தவம்' செய்த மகான் வந்திருக்கிறார்,' என்று கூறி, கபடவேடதாரிகளுக்குப் பாராட்டு விழா நடத்துவது நிற்கவேண்டும்.

'பகவான் அருளை இந்தப் பக்தர்களின் மூலம் பெறலாம்; அதன் மூலம் நோய் போகும்; செல்வம் குவியும்; செய்த குற்றங்கள் மறைந்து போகும்;' என்று எண்ணிக்கொண்டு, சாதுக்களையும், பைராகிகளையும் வளர்க்கும் செயல் நாட்டினின்று ஒழிய வேண்டும்.

'பர்ணசாலையிலே வாழ்கிறார்கள்; பச்சைப் பாலை அருந்துகிறார்கள்; பகவானின் நாமத்தைதவிர வேறெந்த நினைப்பும் இவர்களுக்குக் கிடையாது,' என்று கூறுகிறார்கள்.

பர்ணசாலைகளிலே இப்போது மின்சார விசிறிகளும், மேநாட்டிலே கிடைக்கும் உயர்தரப் பொருள்கள் அனைத்தும் காணப்படுகின்றன; தங்கக் குத்துவிளக்குகள் வைத்திருக்கும் மடங்கள், மோட்டார் வைத்திருக்கும் மடாதிபதி இவர்கள் எல்லாம், பரமனின் நாமத்தையன்றி வேறு எந்த நினைப்பையும் கொள்ளாதவர்கள் என்று கூறுகிறார்கள்!

ஆனால், 'கட்டாக் மடத்திலே போலீசார் சென்றபோது பல ஆயுதங்களைக் கண்டனர்,' என்று செய்தி வருகிறது.

'கோரக்பூர் அருகே பர்ணசாலையில் துப்பாக்கிகளைக் கைப்பற்றியபோது, அந்தக் குடிசையிலே இளம் பெண்கள் சிலர் இருந்தனர்,' என்று உ. பி. சட்டசபையிலே அமைச்சர் கூறுகிறார்.

சாதுக்கள், சன்னியாசிகள் என்று மக்களுக்கு உபதேசம் செய்யும் பலருடைய உறைவிடங்கள் — பர்ணசாலைகள், பக்தர்கள் வாழுமிடங்களாக மட்டும் இருப்பதில்லை; பயங்கரக் குற்றம் செய்துவிட்டு, போலீசாரின் பிடியிலிருந்து தப்பிய பலரின் மறைவிடமாகவும், நாட்டு மக்களிடையே காணப்படும் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வைச் சுரண்டும் வஞ்சகர்கள் வாழும் இடங்களாகவும் அந்தப் பர்ணசாலைகள் காட்சியளிக்கின்றன என்பதைப் பொது மக்கள் உணர்ந்து கொண்டால் சாதுக்கள் தோன்றமாட்டார்கள்; சன்னியாசிகள், பருவ மங்கையரின் வாழ்வை தங்கள் சுகத்திற்குப் பலியிடும் நிகழ்ச்சிகளும் நடைபெறாது.

"பர்ணசாலையிலே, பகவான் அருள் கிட்ட வழியில்லை; அங்கே காணப்படுவது எத்தர்களின் வாழ்வு— ஏமாற்றிப் பிழைப்போரின் உல்லாச வாழ்வு," என்பதை மக்கள் உணர்ந்து கொண்டால், பர்ணசாலைவாசிகளிடம் பணம் குவியாது; நாடும், இந்த நாசகாரர்களின் நயவஞ்சகச் செயல்களிலிருந்து விடுபடும்.

இந்தி வெறியை எதிர்க்க, சொந்தநாட்டை நினைவூட்ட

தென்னாட்டு மக்கள்சபை உறுப்பினரின் உணர்ச்சி வெள்ளம்!

கட்சியை மறந்து காரியமாற்றும் காலம் கனிந்துவிட்டது

டெல்லியில் திராவிட பிரிவினைப் போரின் எதிரொலி

தென்னிந்திய மக்களின் உணர்ச்சியையும், உள்ளக்கிடக்கையையும் டெல்லி சரியாக, நன்றாகப் புரிந்துகொள்ளாதது மட்டுமின்றி, தென்னிந்தியா என்ற பகுதி ஒன்று இருக்கிறது என்ற கவனம்கூட வடநாட்டவர்க்கு இருப்பதாகக் காணோம்.

பழமை விரும்பிகளாயிருக்கிற 'பத்தாம்பசலி'களான காங்கிரஸ்காரர்கள்கூட இந்த அவல நிலை நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைத் தடுக்க வேண்டிய காலம் கனிந்துவிட்டதாகவே உணர்வதையும், அதற்காக, 'மேலிடம்'களில் 'வலுவான தூது' ஒன்று செல்ல வேண்டுமென்று எண்ணுவதாகவும் தெரியவருகிறது.

வடநாட்டு இந்தி ஆதரவாளர்களின் அவசரப் புத்தியும், திரு—கொச்சியில் தமிழர்கள் படும் இன்னலும், இலங்கை இந்தியர் பிரச்சினையில் இந்தியா—இலங்கை ஒப்பந்தம் தோற்றுப் போனதும் தென்னிந்திய மக்கள் சபை உறுப்பினர்களிடையே ஒருவித 'சலசல'ப்பை உண்டு பண்ணியுள்ளனவாம்.

தென்னாட்டு மக்கள்தம் உணர்வை மதிக்காத வடவரை "எதிர்த்துப் போரிட," கட்சி வேற்றுமையைக் கூட எல்லா உறுப்பினர்களும் மறந்துவிடக்கூடும் என்றும் நம்பலாமாம்.

டில்லி மக்கள் சபையில் வடநாட்டு இந்தி ஆதரவாளர்கள், இந்தியை தேசிய மொழியாக்குவதில் காட்டுகிற அவசர புத்தியும் அதற்காக அவர்கள் கையாளுகிற 'தந்திர'ங்களும் தென்னிந்திய உறுப்பினர்களுக்கு ஒருவகை 'பீதி'யை உண்டுபண்ணியுள்ளதாம். இந்தி ஆதரவாளர்களின் இந்த விபரீதப் போக்கை உடன் தடுத்து நிறுத்தாவிடில் மக்கள் சபையிலும் ராஜ்யங்கள் சபையிலும் உள்ள தென்னாட்டு உறுப்பினர்கள், அன்றாட சபை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்கு இடையூறாக இருக்கும் என்று கருதப்படுவதாகவும் தெரிகிறது.

சென்ற வாரத்தில் மக்கள் சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட வடநாட்டுக்காரர்களில் ஒருவர் வெளிநாடுகளுக்கு தூதுக் குழுத் தலைவர்களாகச் செல்பவர்கள் இந்தி தெரிந்தவர்களாயிருக்க வேண்டும் என்று வாதம் புரிந்தாராம். பண்டித நேரு அதைக் கண்டித்திருக்கிறார் என்றும் இந்தி தெரிய வேண்டும் என்று பேசிய அந்த வடநாட்டு உறுப்பினர் தோழர் வி. கே. கிருஷ்ண மேனன் பல தூதுக் குழுக்களின் தலைவராக்கப்படுவதைக் கண்டிக்கிற 'பாணி'யில் பேசினதாகத் தெரிகிறது.

மந்திரி கிருஷ்ணமாச்சாரி கூட இதை நகைச்சுவையாகப் பேசிக் கண்டித்தாராம். மக்கள் சபையில் பேசுகையில் அவர் 'இந்தி மொழி திணிக்கப்படுகிற வேகத்தைப் பார்த்தால், தென் இந்திய அரசியல்வாதிகளிடை வேலை இல்லாத திண்டாட்டம் தோன்றிவிடக்கூடும் என்று அஞ்சுகிறேன்" என்று குத்தலாகப் பேசியிருக்கிறார்.

மேலிடத்திற்கு எப்படி இந்த இந்திப் பிரச்சினையை எடுத்துச் செல்வது என்பது இன்னமும் முடிவாகாத—தெளிவில்லாத ஒன்றாக உள்ளதாம்; எனினும் மக்கள் சபையில் இப்பிரச்சினை விவாதத்திற்கு வருமுன் மக்கள் சபை காங்கிரஸ் கட்சியின் முன் இப்பிரச்சினை விவாதிக்கப்படக்கூடும் என்று நம்பப்படுகிறது.

தெளிவாகத் தெரிவது ஒன்று மட்டும்தான். அதாவது இந்தப் பிரச்னையை தென்னிந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் எந்த ஒரு தனிப்பட்ட கட்சியின் பிரச்னை என்றும் கருதவில்லை, எல்லாக் கட்சியினரும் காங்கிரஸ் கட்சியினர் உள்பட இப்பிரச்னையில் ஒன்றுபட்டு வேலை செய்வர் என்று மட்டும் தெரிகிறது.

தமிழ் நாடு காங்கிரஸைச் சேர்ந்த ஒருவர் கீழ்க்கண்டவாறு கூறுவதாகத் தெரிகிறது:—

தென்னிந்திய மக்கள் ஒரு புதிய மொழியைக் கண்டு அஞ்சமாட்டார்கள். ஆங்கிலத்தை அவர்கள் நன்கு கற்றுக் கொள்ளவில்லையா என்ன? அதே போன்று அவர்களால் இந்தியையும் நன்கு கற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவர்கள் எதற்காக இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே கேள்வி. இந்தியை தென்னாட்டவர் ஏன் கற்றுக் கொள்ள வேண்டும்.

தென்னிந்திய மக்களின் நலன்களை வட இந்தியாவின் நலன்களுக்காக ஒதுக்கி வைப்பதுதான், தேசிய ஒற்றுமை என்று மதிப்பிடாது தென்னாட்டவரின் உள்ளக் கிடக்கைக்கு வட இந்தியர்கள் மதிப்பளித்து அவற்றைப் புரிந்து கொள்வார்களேயானால், மட்டுமே, இந்தி மொழி எவ்வித இடையூறுமின்றி இடம் பெற முடியும் தென்னிந்தியாவில்.

தென்னிந்திய ராஜ்யங்கள், சுயமரியாதையுடன் மற்ற ராஜ்யங்களுடன் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக் கொள்வதற்காகத்தான் இந்திய யூனியனில் இருக்கின்றன என்ற நம்பிக்கை காலப்போக்கில் தென்னாட்டு மக்களிடை வளர்ந்தால்தான் அவர்கள் இன்று ஆங்கிலத்தின் மீது கொண்டுள்ள நல்லெண்ணத்தை இந்திமொழி மீது கொள்ள முடியும். உண்மையில், அந்த நல்லெண்ணத்தை, வடநாட்டு அரசியல்வாதிகள் தென்னிந்தியா மீது அக்கறை கொண்டு அவர்களைப் புரிந்து கொள்வதின் மூலமாக எவ்வளவு சீக்கிரம் வளர்க்கிறார்களோ அவ்வளவு சீக்கிரம் இந்திக்கு தென்னாட்டில் இடம் கிடைக்கும். ஆனால், பரபரப்புடன் முரட்டுத்தனமாக அவசரப்பட்டு இந்தியை தென்னாட்டவர் மீது திணிப்பதற்கு வடநாட்டவர் முயலுவது, இந்தி மீது உள்ள வெறுப்பை வளர்ப்பது மட்டுமின்றி தென்னிந்திய அரசியல்வாதிகளின் ஒரு பிரிவினர் தனிநாடு கோரி நடத்தி வருகிற ஆபத்தான போராட்டங்களை வலுவடையச் செய்வதாகவும் ஆகும்.

இவ்வாறெல்லாம் அந்த தமிழ் நாடு காங்கிரஸ்காரர் அபிப்பிராயப்படுகிறாராம்.

இன்னும்; திரு—கொச்சியில் தமிழர்படும் இன்னல்களை 'டில்லி தேவதை' கண்ணை திறந்து பார்க்காமலிருப்பதும் தென்னாட்டு உறுப்பினர்களை வேதனைக்குள்ளாக்கியிருக்கிறதாம்.

இலங்கை இந்தியர் பிரச்னைக்காக செய்யப்பட்ட நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் தோற்றுவிட்டதாகவும், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரின் நிலைமை குறித்து அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறதாம்.

தென்னாட்டு பிரச்னைகள், டெல்லி வட்டாரத்தில் வரும் வாரத்தில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணக் கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுக்கும் திட்டம்

இந்திய சர்க்கார் உதவி

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், ஜூன் மாதத்தில் இந்திய சர்க்கார் மொத்தம் ரூ 3,14,35,297 வழங்கியுள்ளனர்.

இந்தத் தொகையில், ரூ 1,07,46,000 பம்பாய் சர்க்காருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தெ. மே. ஆப்பிரிக்காவில் நிறவெறி!

சொந்த நாட்டவர்க்கு உரிமையில்லை

லிபரல் கட்சியினர் கண்டனம்

"தென் மேற்கு ஆப்பிரிக்கா, எல்லா வகையாலும், ஒரு போலீஸ் ராஜ்யமாக விளங்குகிறது. தென்பதில் எவருக்கும் ஐயம் வேண்டாம்; அங்கு வெள்ளையரல்லாத மற்றெல்லோருக்கும் அடிப்படை வாழ்க்கை நிலைகளே மறுக்கப்படுகின்றன.

சொந்த நாட்டுக்காரர்களுக்கு எவ்வித அரசியல் உரிமைகளும் இருக்கவில்லை. அவர்களுடைய நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு எத்தவிதமான வழிவகையும் காணப்படவில்லை.

அவர்கள் சமுதாயத்தில் பங்கு பெற்றிருப்பதே, உழவர்களும் தொழிலாளர்களும் வியர்வை சொட்டச் சொட்ட தங்கள் உழைப்பை நல்குவதற்குத்தான் போலும்.

நிறவேற்றுமை அங்கு முழு அளவிலே நிலவுகிறது; சுகாதார வசதிகள் சற்றும் போதுமானதாக இல்லை. இருந்தவை 'மிஷன்'கள் இல்லாமற்போயிருந்தால் அங்கு கல்வி வாடையே இல்லாதுபோயிருக்கலாம்."

இவ்வாறு இங்கிலாந்தில் லிபரல் கட்சிப் பொருளாளரான பிலிப் பாதர்விக் என்பவர், ஐ. நா. சபையினர் தென்மேற்கு ஆப்பிரிக்கப் பிரதேசங்களின் நிலை குறித்து தயாரித்துள்ள அறிக்கை ஒன்று பற்றிக் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலைகள் அங்கு நிலவுவதாக அறிக்கையில் கண்டிருப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இந்த ஆப்பிரிக்க சுதேசிகளின் நல்வாழ்வுக்கான குரல் இன்று ஐ. நா. சபை வரை எட்டியுள்ளது.

ஐ. நா. சபையினரும் இந்த அவலக் குரல் கேட்டு ஆவன செய்ய முன்வந்திருக்கிறார்களே, உலகம் இன்றுள்ள நிலையில், அதுதான் ஆச்சரியப்படத் தக்க அம்சமாகவும் வரவேற்கத்தக்கதுமாகும்.

இது ஒரு சோதனைக்குரிய மிக முக்கியமான பிரச்னை என்பது எல்லோரும் ஒப்புவர்.

இந்த ஆப்பிரிக்கப் பிரச்னை, ஒரு சுதந்திர சமுதாயம் என்கிற உயரிய கொள்கை, நியாயமான சட்டம், மனிதத் தன்மை, அடிப்படை உரிமைகள், மத நம்பிக்கை இவற்றை எல்லாமே விமர்சனத்திற்கு கண்டனத்திற்கு இழுத்துவந்து விடுகிறது.

சர்வதேச சட்டத்தின் நோக்கம் காப்பாற்றப்படவும், தனக்கு அதிகார வரம்பு உண்டென்பது நிலைநாட்டப்படவுமாக ஐ. நா. சபைக்கு ஒரு போராட்டத்தையே உருவாக்கி உள்ளது இப்பிரச்னை.

"இன்று தெ. மே. ஆப்பிரிக்காவை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல பிரிட்டிஷ் அரசக் குடும்பத்தில் ஒருவர்தான். எனவே அது ஆக்கிரமிப்பன்று என்று பேசப்படுகிறது. பொருளாதார ராணுவப் பிரச்னைகளை தெ. மே. ஆப்பிரிக்காவிற்கு எதிராகத் திருப்புவதே கூடாது. தவறான தனது கொள்கையினால் அங்கு நிலவுகிற கொடுமையும் கொடுமையும் பிறரால் பார்க்கப்படாது இருந்துவிடக்கூடும் என்று எண்ணிவிட முடியாது."

இவ்வாறும் பாதர்விக் குறிப்பிட்டனர்.

முகமது அலி

லீக் தலைவர் பதவியைத் துறப்பார்

கராச்சி, செப். 20—

பாகிஸ்தான் பிரதம அமைச்சர் முகமது அலி தான் வகிக்கும் முஸ்லீம் லீகின் தலைமைப் பதவியை கைவிட்டுவிடுவார் என்று தெரிகிறது.

பிரதம அமைச்சரும், லீக் தலைவரும் ஒரே நபராக இருப்பது அவ்வளவு பொருத்தமானதென்று அவர் கருதவில்லை என நிருபர்களிடையே கூறியுள்ளார்.

காலஞ்சென்ற ஜின்னா அவர்களின் சகோதரி பாத்திமா ஜின்னா அவர்கள் லீகின் தலைமைப் பதவியை ஏற்றால், தான் மிகவும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்பதாயும் முகமது அலி மேலும் கூறினார்.

முதலாளித்துவம் ஒழிய வேண்டியதில்லை!

கம்யூனிஸ்டு பிரமுகர் பேச்சு

திருச்சி, செப். 14—

திருச்சி ரோட்டரி கிளப்பில், நேற்று மாலை, தோழர் எம். கலியாணசுந்தரம் எம் எல் ஏ., 'நான் கண்ட ரஷியா' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கு எஸ். டி. ஆச்சாரியா தலைமை தாங்கினார். தோழர் கலியாண சுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் கம்யூனிஸ்டு கொள்கை, ரஷியக் கொள்கைகளுக்கு மிக வித்தியாசப்பட்டன்று. இந்தியாவில் முதலாளித்துவம் ஒழிய வேண்டுமென்று சொல்லவில்லை இங்கு கம்யூனிஸ்டு கட்சி, ஏழ்மையை போக்கவும், நிலச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தவும், தொழில் அபிவிருத்திக்கும் போராடி வருகிறது. இப்போது இந்தியாவில் பூரண தேசியமயமாக வேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்டு கட்சிக்கு இல்லை. வெளிநாட்டு மூலதனத்தை ஒழிக்க வேண்டுமென்பதுதான். ரஷியாவில் அதிக ஜனத்தொகை பற்றிக் கவலையில்லை. அதற்கு மாறாக, அங்கு அதிகமான ஜனங்கள் இருப்பதே ஒரு செல்வம் எனக் கருதுகிறார்கள்."

இயந்திர மூலம் தயாரித்த பீடிகள்

வரி மசோதா நிறைவேற்றம்

இயந்திரங்களின் உதவியால் தயாரிக்கப்படும் பீடிகளுக்கு, ஆயிரத்துக்கு ரூ. 8 வரி விதிக்கும் மசோதா மத்திய சபையில் நிறைவேறியது.

இந்த மசோதாவை ஆதரித்து காங்கிரஸ் மெம்பர் திவாரி (பீகார் மாகாணம்) பேசுகையில், "உற்பத்திச் செலவைக் குறைப்பதின் மூலம், ஏற்றுமதி அதிகரிக்கும் என்ற வாதத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்; பாகிஸ்தானில் இறக்குமதியாகும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பீடிகளுக்குத் தடை விதித்திருக்கிறதால், இனிமேல், பீடி ஏற்றுமதியின் அளவு மிகக் குறைவாகவே இருக்கும்" என்றார்.

இயந்திர பீடித் தொழிலின் உள்ள போட்டியை ஒழிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கும் இயந்திரத் தொழிலை அனுமதிக்கக் கூடாதென்றும் இவைகளை நடைமுறையில் கொண்டுவர, ஆயிரத்துக்கு ரூ 3 என்றிருக்கும் வரியை ரூ 8 ஆக உயர்த்தவேண்டுமென்றும் மேற்கு வங்க கம்யூனிஸ்டு மெம்பர் சதன் குப்தா கூறியிருக்கிறார்.

திரு—தமிழர் தலைவர்கள்

விடுதலை மனு நிராகரிப்பு

திருவனந்தபுரம் செப். 20—

சென்ற ஆகஸ்டு 11-ந் தேதி, திருவாங்கூர் தமிழர் மீது, திரு-கொச்சி போலீசார் சுட்டதின் விளைவாக ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்ட திரு-த நா. காங்கிரஸ் தலைவர்களான குஞ்சன் நாடார், தாணுலிங்க நாடார், வில்லியம் (எம் எல் ஏ-க்கள்) ஆகிய 13 பேர், தங்களை விசாரணையின்றி காவலில் வைத்திருப்பது சட்ட விரோதம் என்றும், தங்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும் கோரி உயர்நீதி மன்றத்துக்குச் செய்து கொண்ட மனுவை, திரு-கொச்சி உயர்நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்திருக்கின்றனர்.

மேலும், அந்த மனுக்களை 'சுப்ரீம் கோர்ட்டு'க்கு (டில்லி) அப்பீல் செய்து கொள்ளக் கூடாதென்றும் தடை விதித்திருக்கின்றனர்.

குறுக்கெழுத்துப் போட்டி

டில்லி சட்டமியற்றும்?

குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்வதுபற்றி, மக்கள் சபையில் நாகேஸ்வர பிரசாத் என்ற ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், தற்போது எந்த இராஜ்யத்திலும் குறுக்கெழுத்துப் போட்டிக்குத் தடை விதிக்கப்பட்டதில்லை என்றும், இது விஷயமாக மாநில சர்க்கார்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு, அவைகளிடமிருந்து பதில் வந்து விட்டதாகவும், அவைகளின் கருத்துப்படி, குறுக்கெழுத்துப் போட்டியை அடியோடு ஒழித்துக் கட்டுவதா, அல்லது நிறைய கட்டணம் (லைசென்ஸ்) விதித்து அதைக் கட்டுப்படுத்தலாமா என்பதுபற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும், உதவி உள்நாட்டமைச்சர் பி. என். தத்தார் பதிலளித்துள்ளார்.

சீட்டோ:

பாக். சர்க்கார் இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லையாம்!

கராச்சி, செப். 20—

பாகிஸ்தான் மந்திரி சபை 'சீட்டோ' பற்றி தனது இறுதியான கருத்து என்னவென்பதை இன்னும் முடிவு செய்யவில்லை என்று தெரிகிறது.

ஜபருல்லாகானின் கையெழுத்திடப்பட்ட 'சீட்டோ' ஒப்பந்தத்தை பாக். சர்க்கார் அங்கீகரிக்காது என்று தெரிகிறது.

மனிலா மகாநாடு சம்பந்தப்பட்ட பூரா விபரங்களும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும், ஒப்பந்தத்தை கராச்சி சர்க்காருக்கு தெரிவிக்காமல்தான் ஜபருல்லாகான் கையெழுத்திட்டார் என்றும் பாக். பிரதமர் முகமது அலி நிருபர்களிடையே கூறினார்.

இதனாலேயே பாகிஸ்தான், 'சீட்டோ'வைப் பொறுத்தமட்டில் எவ்வித கருத்துக்கும் இடம் கொடுத்துவிடவில்லை என்று முகமது அலி மேலும் கூறியுள்ளார்.

அண்மையில் முகமது அலி அமெரிக்கா செல்லும்போது 'சீட்டோ' பற்றி அமெரிக்க நிர்வாகத்துடன் விவாதிப்பாரா என்று கேட்டபோது, 'நாங்களே அதுபற்றி இன்னும் ஒரு முடிவிற்கு வராமல் இருக்கும்போது, அமெரிக்காவுடன் எப்படி விவாதிக்க முடியும்?' என்று கூறினார்.

கோவா பிரச்சினை

'நேட்டோ' மூலம் பரிகாரம்?

போர்ச்சுகலுக்குத் தூபமிடும் போக்கு!

"தன்னுடைய பிரதேசங்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகப் போர்ச்சுகல் நினைக்குமானால், 'நேட்டோ'வின் 4-வது பிரிவுப்படி, 'நேட்டோ' இதைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று, போர்ச்சுகல் கோரலாம்," என்று, 'நேட்டோ' காரியதரிசி லார்டு இஸ்மே, "கோவா சம்பந்தமாக போர்ச்சுகல் 'நேட்டோ'வின் உதவியை நாடினால் 'நேட்டோ' என்ன செய்யும்?" என்று கேட்ட நிருபர்களுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

'நேட்டோ'வின் 5-வது பிரிவுப் பிரகாரம், கோவா பிரதேசம் கூட்டுப் பாதுகாப்பிற்கென குறிக்கப்பட்டிருக்கும் பிரதேச எல்லைக்கு அப்பாலேயே இருக்கிறது என்றும், இது பற்றிய விஷயங்கள் ஆலோசனை செய்யத்தான் ஆகவேண்டுமென்கிற அளவிற்கு வந்தால், இந்தப் பிரச்சினை, எல்லாருடைய கூட்டு முடிவுக்கும் விடப்பட்டதாகி விடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

"'நேட்டோ'வின் 5-வது பிரிவை 4-வது பிரிவாக மாற்ற, 'நேட்டோ' நடவடிக்கை எடுக்குமா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஆலோசனை செய்வதென்பது எல்லா அங்கத்தினர்களும் ஒரு மனப்பட்டுச் செய்யும் முடிவுக்கு இணங்கி நடப்பது என்றும் பொருள் கொள்ளலாம்" என்று கூறியிருக்கிறார்.

விலைவாசி ஏற்றம்

நேபாள மக்கள் ஆர்ப்பாட்டம்

பிரதமர் கோய்ராலா வாக்குறுதி

நேபாள நாணயங்களின் மதிப்பு வீழ்ச்சியையும், பொருள் விலைவாசி உயர்வையும் தடுக்க வேண்டுமென்று நேபாளப் பிரதமர் எம். பி. கொய்ராலா வீட்டிற்கு முன், மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் தூது கோஷ்டியொன்று பிரதமரைச் சந்தித்தபோது, இது விஷயமாகச் சர்க்கார் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளைப் பிரதமர் தெரிவித்தார்.

இன்னும் 5 தினங்களில், வியாபாரிகள் தங்களிடமுள்ள கையிருப்புப் பண்டங்களின் மதிப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றும், அத்தியாவசியமான பொருட்கள், விமான மூலம் இறக்குமதியாக ஏற்பாடு செய்யப்படும் என்றும், அப்பொருட்களை நியாயமான விலையில் விற்க ஏற்பாடு செய்வதாகவும், இறக்குமதியாகும் ஆடம்பரப் பொருட்களுக்கு அதிக சுங்க வரி விதிப்பதாகவும், கள்ள மார்க்கெட்டை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார், என்று தெரிகிறது.

இதுவரை, 24 கள்ளமார்க்கெட்க்காரர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், போலீசாரின் திடீர் பரிசோதனையில், கிடங்குகளிலிருந்து 60 மூட்டை சர்க்கரையும், 400 மண்ணெண்ணெய் டின்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு இலவச மருத்துவ உதவி

சென்னை, செப். 20—

மாதம் ரூ 300-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் சர்க்கார் ஊழியர்கள், (என். ஜி. ஓ) சர்க்கார் மருத்துவ மனைகள் இல்லாத ஊர்களில் ஸ்தலஸ்தாபன ஆஸ்பத்திரிகளிலோ அல்லது தனியாட்டோர் நடத்தும் மருத்துவ விடுதிகளிலோ இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்படுவார்கள் என்று சென்னை சர்க்காரின் உத்தரவு ஒன்று கூறுகிறது.

இந்த சலுகை இதுவரையிலும் சர்க்காரால் ஏற்று நடத்தப்பட்டு வந்த மருத்துவ மனைகளில் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்தது.

இலங்கை தி. மு. கழகம்

பொதுக் குழு தேர்தல்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு உறுப்பினர்கள் கூடி பொதுச்செயலாளர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க இருக்கின்றனர்.

தேர்தல் கூட்டம் 26—9—54 ஞாயிறன்று காலை 9 30 மணிக்கு கொழும்பு 'லயாட்ஸ் பிராட்வே' ஸ்ரீநாராயணகுரு மண்டபத்தில் நடைபெறும்.

பொதுக் குழுக் கூட்டத்திற்கு தோழர் என். கதிரவன் தலைமை தாங்குவார். தேர்தலை தலைமை தாங்கி நடத்திவைக்கும் பொறுப்பை தோழர் ஏ. எம். துரைசாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இலங்கை தி. மு. கழகத்திற்கு ஒரு பொதுச்செயலாளர், இரண்டு துணைச் செயலாளர்கள், ஒரு பொருளாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் புதிய பொதுச்செயலாளர் நீதி(பஞ்சாயத்து)க் குழு, சட்டதிட்டக் குழு, செயற் குழு ஆகியவைகளை அமைத்து அக்குழுக்களில் இடம் பெறுவோரின் பெயர் பட்டியலை அறிவிப்பார்.

இந்தத் தேர்தல் இலங்கை தி. மு. கழக பொதுக் குழுவின் சட்டதிட்டக் குழுப் பிரிவினர் கடந்த 29—8—54 அன்று கூடித் தீர்மானித்தபடி நடைபெறுகிறது.

இலங்கையில் உள்ள எல்லா பொதுக் குழு உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் செவ்வனே நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும், தேர்தலில் கலந்துகொள்ளும் பொதுக் குழு உறுப்பினர்களுக்கு உணவு வசதிகளையும் பொறுப்பாளர் இரா. அதி. மணி அதிமணி சிறப்புறச் செய்து வருகிறார்.

இலங்கை முழுவதற்குமாக, ஜனநாயக ரீதியில் நடைபெறுகிற இத்தேர்தல் இலங்கை தி. மு கழகத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும் என்றும், இலங்கை தி. மு. கழகத்தின் எல்லா பொதுக் குழு உறுப்பினர்களும் தேர்தலில் கலந்து கொண்டு சிறப்புற தேர்தலை நடத்தித்தருமாறு வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொதுச்செயலாளர் சொற்பொழிவு (1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய சொற்பொழிவின் துவக்கத்தில் அண்ணாதுரை அவர்கள் கூறியதாவது:—

"நெல்லை மாவட்டத்திலுள்ள நமது கழகத் தோழர்கள், தங்களுக்கு நேர்ந்துள்ள பலவித தொல்லைகளையும், துன்பங்களையும் பொருட்படுத்தாமல், இவ்வளவு சிறுஞ்சிறப்புமாக, இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளதைக் காணப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்; எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்; தொல்லைகள் எவ்வளவுதான் நேரிட்டாலும் கடமையாற்றும் போக்கு வளர வேண்டுமென விரும்புகிறேன்.

இந்த மாவட்டத்தில், கல்லக்குடி தோழர்கள் அறப்போராட்டத்தில் கலந்துகொண்டது காரணமாகத் தொடரப்பட்டுள்ள வழக்கைப் பற்றி நீங்கள் அறிவீர்கள்.

அந்த வழக்கில், நீதியைப் பெறுவதற்காகச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம், தி. மு. கழக தலைமை நிலையம் நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

வழக்கு நடந்துகொண்டே இருக்கிறது; எனினும், மாநாடு இங்கு நடைபெறத் தவறவில்லை.

இன்று காலை முதல் இதுவரையும் பல நண்பர்கள், சீர்திருத்தத்தின் அவசியத்தை விளக்கிப் பேசி இருக்கிறார்கள்.

அவர்களது பேச்சில் சித்தார்த்தன் முதல் சித்தர்கள் வரையில், ஆண்டவன் முதல் ஆபிரகாம் லிங்கன் வரையில், பலப் பல கருத்துக்கள், பலப் பல அறிஞர்களைப் பற்றியும் தெளிவுபடுத்தப் பட்டன. இந்தக் கருத்துக்களை நீங்கள் வேறு எங்கே கேட்டறிய முடியும்? பலப் பல ஏடுகளைப் புரட்டினாலும், படித்தாலும் எளிதிலே அறிய முடியாத அரிய கருத்துக்களை, இங்கே தொகுத்தும், வகுத்தும் எடுத்துக் கூறியுள்ளனர் எனது தோழர்கள். உயர்தரக் கல்லூரியில், ஒரு சில ஆண்டுகள் பயின்றால் மட்டுமே பெறக்கூடிய கருத்துக்களை, இங்கே ஒரு சில மணி நேரங்களில் கேட்டீர்கள்.

இந்த அறிவைப் பரப்பும் பணியை மேற்கொண்டுள்ளதால்தான் — நான் சொல்கிறேன்—தி. மு. கழகம் ஓர் கட்டணம் வாங்காத கல்லூரி; அதுவும், மக்களைத் தேடி வந்து அறிவூட்டும் பல்கலைக் கழகம்.

எனவே, நீங்கள், இங்கு பேசப்பட்ட கருத்துக்களைச் சிந்திக்க வேண்டும்.

சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் முதலாக இன்றைய சுயமரியாதை இயக்கம் வரையில், மக்களின் நல்வாழ்வுக்காக, ஆற்றியுள்ள அரும் பணிகளை எண்ணுங்கள்.

ஆனால், நம் நாட்டிலோ, படித்தவர்களிலேயே பலர், இயல்பாக வளர்ந்துள்ள அறிவியக்கக் கருத்துக்களையும், பழங்காலக் கொள்கைகளையும் கலந்தேதான் பேசியும், எழுதியும் வருகின்றனர். மனுமாந்தாதா காலத்தில் தோன்றிய சனாதன தர்மத்தைக், கைவிடாமலேயே இருபதாவது நூற்றாண்டின் விஞ்ஞான வாழ்க்கையும் மேற்கொள்ள முயல்கின்றனர்.

"மேல் நாட்டிலே இன்று காணப்படும் முற்போக்கு படிப்படியே வளர்ந்ததாகும். சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் சிந்தனையை வெளியிடும் உரிமைக்காக, உயிரையே இழக்கத் துணிந்தபின், ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, மேல் நாட்டிலே வளர்ந்தபடி இருந்தது.

அதன் பயனாகப் பழமைக் கருத்துக்கள் தகர்க்கப்பட்டன; அடுத்து, புரோகித ஆட்சி, மத ஆதிக்கம் வீழ்த்தப்பட்டது; பாவ மன்னிப்புச் சீட்டு விற்று, மக்களை ஏய்த்துப் பிழைத்த பாதிரிமார்களின் ஆதிக்கம் விரட்டப்பட்டது; அதன் பின்னரே, மன்னர் ஆட்சி ஒழிந்து மக்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது; ஜனநாயகம் படிப்படியே வளர்ச்சியடைந்தது; இறுதியாகவே, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கார்ல்மார்க்ஸ் கண்ட பொதுவுடைமை நெறி, லெனின், ஸ்டாலின் போன்ற செயல்வீரர்களால் இடம் பெற்றது.

பாதிரிகள் ஒழிப்பு, மத ஒழிப்பு, மன்னர் ஒழிப்பு, மக்கள் ஆட்சி, பொதுவுடைமைத் திட்டம் — என்று வளர்ந்த இந்த முறைகள், இந்நாட்டில் எவ்வகையில் இடம் பெறுகின்றன? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வருணாச்சிரம தத்துவத்தையும், மன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்த ஆளும் மனப்பான்மையையும், விசித்திர காரணமாக, 17-ம் நூற்றாண்டில் தோன்றிய ஜனநாயக முறையையும், 20-ம் நூற்றாண்டில் இடம் பெற்ற பொதுவுடைமைத் திட்டத்தையும், ஒன்றாக அல்லவோ நிலைநிறுத்த விரும்புகின்றனர்?

இந்தக் காட்சி எப்படி இருக்கின்றதெனில், பழங்காலத்தில் செய்து கலகலத்துப்போன வண்டியொன்றில், ஒரு பக்கத்தில் அராபி குதிரையையும், மற்றொரு பக்கத்தில் தார்த்தாரி புரவியையும் பூட்டி, அதை ஓர் எஞ்சின் மோட்டாரை ஓட்டச் செய்து, பின்னாலே நின்று கீக்ரோக்கள் பிடித்துக் கொண்டிருக்க, அதில் நாம் ஏறி அமர்ந்து கொண்டுள்ளதுபோல் தெரிகிறது.

கலகலத்துப்போன வண்டி, கடுவேகமாகச் செல்லும் கட்டுக்கடங்காத முரட்டுக் குதிரைகள், ஓட்டத் தெரியாத ஆள், என்பது போன்ற நிலையிலே தான், இன்றைய நம்நாட்டின் நிலைமை உள்ளது.

எனவேதான், முதலில், பழமையினால் படிந்துபோயிருக்கிற மூடநம்பிக்கைகளை, தவறான கருத்துக்களை நீக்க வேண்டியது நம்முடைய பொறுப்பாகிறது.

மேல்நாட்டின் தோன்றிய ஜனநாயகத்திற்கு அடிப்படையான, பிரெஞ்சுப் புரட்சி, ரூசோ, வால்டேர் எழுத்துக்களினின்றும் மலர்ந்ததாகும். அவர்கள் வெளியிட்ட எண்ணங்களும், கருத்துக்களுமே, 'மனிதன் பிறக்கும்போது உரிமையோடுதான் பிறக்கிறான்; பிறந்த பின்போ அடிமையாகவே இருக்கிறானே, ஏன்?' என்ற கேள்வியையும், மன்னர் ஆட்சியையும் மாற்றியமைக்கும் துணிவையும் வளர்த்தன. அதனால்தான் நாமும், சமூகச் சீர்திருத்தம், அரசியல் பொருளியல் சீர்திருத்தத்திற்கு முன்னதாகவே நிகழவேண்டும் என்று விரும்புகிறோம்.

அதற்காக நாம் அடைந்துள்ள இன்னல்களும் தொல்லைகளும் கொஞ்ச நஞ்சமல்ல; என்றாலும், பெற்றுள்ள வெற்றியும் பெருமிதம் அளிப்பதேயாகும்.

நமது கொள்கை வெற்றி பெற்று வருகிறது என்பதற்கு, இன்று நடைபெற்று வரும் சீர்திருத்தத் திருமணங்களின் எண்ணிக்கையே சான்றாகும்.

கடந்த பத்து அல்லது இருபதாண்டு காலத்தில் இந்த நாட்டில் எத்தனை பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன; எத்தனை பஜனை மடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று கணக்கெடுத்துப் பாருங்கள்.

கட்டப்பட்ட மடாலயங்கள் எத்தனை? மருத்துவமனைகள் எத்தனை? எழுப்பப்பட்ட ஆலயங்கள் எத்தனை? அனாதை விடுதிகள் எத்தனை?—என்று இவைகளைக் கணக்கிட்டால் தெரியும், எது வளர்கிறது, எது தேய்கிறது என்ற உண்மை! நமது முயற்சி நாளும் வெற்றி பெற்றுத்தான் வருகிறது.

என்றாலும் வைதிகம் இன்று பெற்றுள்ள வாய்ப்பையும் வசதியையும் மறந்துவிடக்கூடாது. ஆலயங்களிலும், மடாலயங்களிலும், முடங்கிக் கிடக்கும் செல்வத்தின் மதிப்பு எவ்வளவு? அவற்றில் நடைபெறும் விழாக்களும், கொண்டாட்டங்களும் எவ்வளவு பொருட்செலவோடு நடைபெறுகின்றன? கோயில் விழாக்களிலே கேட்கும் கொட்டு முழக்கும், காணும் வாண வேடிக்கையும் போதுமே, பாமர மக்களை அப்பக்கம் இழுக்க! என்றாலும், அந்த மக்கள் எண்ணத்திலும் மாற்றம் ஏற்படத்தான் செய்கிறது. கோயிலுக்குச் சென்றாலும், அங்கேயே, கோயிலுள்ள குறைகளைச் சாமனியரும் பேசுகின்றனர்; திருவிழாவில் குறை காண்கின்றனர்."

பாக். கவர்னர்-ஜெனரலின் அதிகாரம் குறைக்கப்பட்டது

மந்திரிகளை டிஸ்மிஸ் செய்ய இயலாது

செய்திகேட்டு காரச்சி திரும்பினார் குலாம் முகமது

கராச்சி, செப். 21—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலுக்கிருக்கும் அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தை அபகரித்துக்கொண்டது.

1935-ம் ஆண்டு இந்திய சட்டத்தின் 10-வது விதியைத் திருத்துவதன் மூலம் கவர்னர்-ஜெனரலின் அதிகாரத்தை பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை குறைத்துவிட்டிருக்கிறது.

இதன் மூலம் பிரிட்டனில் இருப்பது போன்ற பாராளுமன்றத்திற்கு உட்பட்ட கட்சி சர்க்கார் ஏற்பட வழி செய்யப்பட்டிருக்கிறது.

இச்சட்டத்தின் மூலம் பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல், பாகிஸ்தான் மந்திரிசபையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட வேண்டியவர் ஆவார்.

கில்ஜிட் பகுதியில் பத்து நாட்கள் சுற்றுப்பயணம் செய்து இருந்த பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் திருத்தம்பற்றி அறிந்த பின்னர், அபோடாபாதிலிருந்து, தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு அவசரமாகக் கராச்சிக்குத் திரும்பினார்.

அவரது விமானம் காரச்சி விமான நிலையத்தில் இறங்குவதற்கு முன்பாக அரசியல் நிர்ணய சபையில் இத்திருத்தம் நிறைவேறிவிட்டது.

பாக் அரசியல் நிர்ணய சபையின் எதிர்க்கட்சித் தலைவரான சட்டோபாத்தியாயா, 'இது, இரத்தம் சிந்தாத புரட்சி' என்றும், 'இதன் மூலம் கவர்னர்-ஜெனரல் பெயரளவில்தான் அதிகாரத் தலைவர்,' என்றும் கூறியுள்ளார்.

செஞ்சீனவுக்கு ஐ. நா.-வில் இடமில்லையாம்!

'உலகப் பாதுகாப்பு சபை'யின் தவறான போக்கு!

நியூயார்க், செப். 21—

ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவை அனுமதிக்க வேண்டுமென்றும், தேசியச் சீனாவை வெளியேற்ற வேண்டுமென்றும் கோரி சோவியத் ரஷ்யா கொண்டு சென்ற பிரரேபணையை ஐ. நா. பொதுச் சபை மறுத்து விட்டது.

சென்னை 48-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

23—9—54 இரவு 8 மணிக்கு சென்னை 48-வது வட்டக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும்.

ஆரிய மாயையின் உரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆரியம் ஒரு மாயை; மற்றவர் உள்ளத்தைக் கவர, அது, பல உருவங்களை எடுக்கும்; அந்த ஆரிய மாயையின் ஒரு உருவந்தான், ஆச்சாரியார், இழந்துவரும் செல்வாக்கை, 'இராமாயணத்' திற்கு மீண்டும் மீண்டும் பெற்றுத்தர முயற்சிப்பது; இந்த ஆரிய மாயையை நாட்டவரிடமிருந்து அகற்றுவதுதான் நமது பொறுப்பு—வேறு யாருக்கும் ஏற்படாத பொறுப்பு, நமக்கு ஏற்பட்டிருக்கிறது';

"வெண்மொழியால் ஜீவானந்தங்களுக்கு அனுமார் சக்தி ஏற்பட்டிருக்கலாம் இன்று; ஆனால் நாம் என்றுமே எதிர்நீச்சல் அடிக்கத் தயங்காதவர்கள்;

"ஜீவாவோ, ஆச்சாரியாரோ, இராமாயணத்தைப் பற்றிப் பேசுகையில், அதில் உள்ள தவறுகளைக் கூடச் சொல்ல வேண்டாம்; இராமாயணத்தில் உள்ள உண்மைகளைச் சொன்னால் போதுமானது; ஆச்சாரியார் உண்மையான இராமாயணத்தை மக்கள் மன்றத்திலிருந்து மறைத்துவிட எண்ணுகிறார்."

—இவ்வாறு, தோழர் கருணாநிதி அவர்கள் 21—9—54ல், சென்னை மெமோரியல் மண்டபத்தில், நடைபெற்ற சென்னை 9-வது வட்ட சௌந்திரபாண்டியன் நினைவுப் படிப்பக முதலாண்டு விழா கூட்டத்தில் பேசுகையில், இராமாயணக் கவிதை ஒன்றைச் சொல்லி, ஆச்சாரியார் அக்கவிதையில் மறைத்து விடுகிற பகுதியையும் பொருளுடன் விளக்கிவிட்டு, மேலும் பேசுகையில், "அக்கவிதையில் கம்பன் செய்த தவறைக் கண்டிக்க ஏன் ஆச்சாரியார் முன்வருவதில்லை—'ஜீவா'க்களுக்கு ஏன் துணிவிருப்பதில்லை" என்று கேட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர், "இப்படி கடவுள் பெயரால், அவதாரங்கள் பெயரால் நாட்டு மக்களின் உள்ளத்தை நெகிழ்ச்சி மலிருக்க, இராமாயணம் போன்ற அழுகிப்போன பிணத்திலிருந்து அடிக்கும் நாற்றம் விளைவிக்கும் தொத்துவியாதிகளினின்றும் மக்களைக் காக்கத் தடுப்பு ஊசி போடுவதுதான் தி. மு. கழகத்தின் வேலை,' என்று குறிப்பிட்டுவிட்டு, "மக்கள், மடமையிலிருந்து விடுபட்டு, மக்கள் மக்களாய் வாழவேண்டும் என்ற லட்சியத்திற்காகத் தன் வாழ் நாள் முழுதும் பாடுபட்ட மாவீரன் சௌந்திர பாண்டியனார் அவர்களின் நினைவு நமக்கு நல்ல ஆர்வத்தையும், ஊக்கத்தையும் தொடர்ந்து பணிபுரியும் உள்ள உரத்தையும் அளிக்க வல்லது," என்றார்.

தனது சொற்பொழிவின் துவக்கத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"ஆறு மாத ஓய்வு பெற வேண்டுமென டாக்டர்கள் கட்டளையிட்டிருந்தனர்; முயற்சித்தேன்—எப்படியேனும் பேசாதிருக்க அந்த ஆறுமாத முழுதும்; ஆனால்....

"கட்டிய மனைவியை விடுத்துத் தாய் வீட்டில் பத்துநாள் இருக்கப் போவதாகக் கூறிச்சென்ற மனைவி, தினம் தினம் தான் காணும் கனவுகளால், கணவனைப் பற்றிய இன்ப நினைவுகளால், பத்து நாளை தாய்வீட்டில் கழிக்க முடியாதவளாகி ஐந்து நாட்களிலேயே கணவன் வீடு வருவது போல், நான் ஆறு மாத காலம் ஓய்வுபெற இருந்தேன்; கணவனைப் பற்றி மனைவி காணும் கனவுபோல், கழகத்தைப் பற்றி நான் காணும் கனவுகளும், கணவன் மீது அந்தக் காதலியும், மனைவி மீது அந்தக் காதலனும் கொண்ட பாசத்தைப்போல் நான் உங்கள் மீது காட்டும் பாசமும், நீங்கள் என் மீது காட்டும் பாசமும், மூன்று மாத கால ஓய்விலேயே உங்களையும், என்னையும் சந்திக்கச் செய்துவிட்டது.

அந்தச் சந்திப்பும், திராவிடத்தின் மறைந்த வைரச்சாரத்தை, பண்பாட்டை மீண்டும் நிலைநாட்டப் போரிட்ட மாவீரன் மறத்தமிழன், சவுந்திரபாண்டியனாரின் நினைவால் இயங்கும் படிப்பகத்தின் ஆண்டுவிழாவின் இடத்திலேதான் பெறும் பேறெனக் கொள்கிறேன்.

"கழகத் தோழர்களுக்கு ஒரு வணக்கமான வேண்டுகோள்—பேசத்தான் முற்பட்டுவிட்டேனே,' என்று நினைத்து, அதிகமான கூட்டங்களுக்கு அழைக்காதீர்கள்; இன்னும் மூன்று மாதங்களுக்கு, வெகு குறைவாக ஆறேழு கூட்டங்களில் மட்டுமே நான் கலந்துகொள்ள இயலும்; பின்னர், வழக்கம்போல மாதத்தில் 15 நாட்கள் சுற்றுப்பயணம் செய்ய முற்படுவேன்; அதுவரை பொறுத்திருங்கள்." என்றார்.

இக்கூட்டம் ஜெனிவாவுக்குச் செல்லத் தக்கதாக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்கள் .... அவர்கள் தலைமையில் நடந்தது. .... காரணமாக .... (.....) வெளியிடப்பட்டது. ..... அவர்கள் தி. மு. க. அண்ணாதுரை எம். ஏ.